**இலங்கை: யுத்தம் நிறைவுற்று 15 ஆண்டுகள் கடந்துள்ள நிலையிலும், பாதிக்கப்பட்டோர் மற்றும் தப்பிப்பிழைத்தோர் இன்றுவரை நீதியையும் பொறுப்புக்கூறலையையும் எதிர்பார்த்து காத்துக்கொண்டிருக்கின்றனர்**

23/05/2024

**2024 மே மாதம் 18 ஆம் திகதியன்று இலங்கையில் பல தசாப்தங்களாக நீடித்த ஆயுத மோதல் முடிவுற்று 15 வருடங்கள் நிறைவடைந்துள்ள நிலையில், தண்டனையிலிருந்தான முழுமையான விலக்களிப்பு மற்றும் போரின் போது இழைக்கப்பட்ட அட்டூழியங்கள் தொடர்பாக பாதிக்கப்பட்டவர்களை மையமாகக் கொண்டிராத நீதி மற்றும் பொறுப்புக்கூறல் ஆகியவற்றின் மீது சர்வதேச சட்டவல்லுனர்கள் ஆணைக்குழு (ICJ) தனது கடும் அதிருப்தியை தெரிவித்துள்ளது. மேலும், சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு, தற்போது பின்பற்றும் பொறிமுறைகளை விடுத்து, மோதலில் பாதிக்கப்பட்ட மற்றும் தப்பிப்பிழைத்த எண்ணற்ற மக்களுக்கு நீதிக்கான உண்மையான அணுகலை வழங்கும் வகையிலான நடவடிக்கைகளை மேற்கொள்ளல் மற்றும் சர்வதேச குற்றங்களுக்கு பொறுப்பானவர்களை சட்டத்தின்கீழ் கொண்டுவந்து பொறுப்புகூறும் நடவடிக்கைகளை எடுக்குமாறு சர்வதேச சட்டவல்லுனர்கள் ஆணைக்குழு அழைப்பு விடுத்துள்ளது.**

2024 மே மாதம் 17 ஆம் திகதியன்று ஐ.நா அலுவலக மனித உரிமைகளுக்கான உயர் ஸ்தானிகரால் (OHCHR) வெளியிடப்பட்ட, **இலங்கையில் வலுக்கட்டாயமாக காணாமல் ஆக்கப்பட்டோர்களுக்கான பொறுப்புக்கூறல்** என்ற தலைப்பிலான அறிக்கையும் இதே விடயத்ததை எடுத்துக்கூறுகிறது. நான்கு தசாப்தங்களாக பரவலாக வலிந்து காணாமலாக்கப்பட்ட சம்பவங்களோடு தொடர்புடைய குற்றவாளிகள் முழுமையாக தண்டனையிலிருந்து விலக்களிக்கப்பட்டிருப்பதையும், காணாமலாக்கப்பட்டோரின் நிலைமை மற்றும் இருப்பிடத்தைக் கண்டுபிடிக்க தவறிய தொடர்ச்சியான தோல்வியையும் அறிக்கை குறிப்பிடுகிறது.

*"OHCHR அறிக்கையின் மூலம் தெளிவாக்கப்பட்டுள்ளதன்படி, காணாமலாக்கப்பட்டவர்களின் குடும்பங்கள் தங்கள் அன்புக்குரியவர்கள் பற்றிய உண்மையை கண்டறிய காலவரையின்றி காத்திருக்க வேண்டிய கட்டாயத்திற்கு உள்ளாக்கப்பட்டுள்ளதோடு அவர்களின் உண்மை, நீதி மற்றும் இழப்பீடுகளுக்கான உரிமைகள் தொடர்ச்சியாக தெளிவாக மறுக்கப்பட்டுள்ளது. இந்தக் குடும்பங்களுக்கு குறித்த கேள்விகளுக்கான பதிலைப் பெறவும், தங்கள் அன்புக்குரியவர்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட கொடூரமான குற்றங்களைச் செய்த குற்றவாளிகள் நீதியின் முன் நிறுத்தப்படுவதைப் பார்க்கவும் முழு உரிமையும் உண்டு"* என சர்வதேச சட்டவல்லுனர்கள் ஆணைக்குழுவினுடைய ஆசிய-பசிபிக் திட்டத்தின் இயக்குநர் மெலிசா உப்ரேடி கூறியுள்ளார்.

இலங்கை அரசாங்கத்திற்கும் (GoSL) தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் (LTTE) இடையிலான ஆயுத மோதலின் இறுதிக் கட்டமானது அனைத்து தரப்பினராலும் புரியப்பட்ட சர்வதேச குற்றங்களால் (அதாவது கடுமையான சர்வதேச மனிதாபிமானச் சட்டங்கள் மற்றும் சர்வதேச மனித உரிமை சட்டத்தின் மீறல்களால்) நிறைந்துள்ளது. சம்பந்தப்பட்ட அதிகாரிகள் பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்தும் நோக்கில் இந்தக் குற்றங்கள் தொடர்பில் இதுவரை சுயாதீனமானதும் பக்கச்சார்பற்றதுமான விசாரணைகளை நடத்த தவறியுள்ளனர்.

ஆயுத மோதல்கள் முடிவுக்கு வந்திருந்தாலும்கூட, இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கில் காணாமலாக்கப்பட்டோரினுடைய பல குடும்பங்கள், முன்னாள் புலிப்போராளிகள், ஊடகவியலாளர்கள் மற்றும் மனித உரிமை செயற்பாட்டாளர்கள் போன்றோர் கடுமையான இராணுவமயமாக்கல்

சூழ்நிலையில் தொடர்ந்தும் துன்புறுத்தல், அச்சுறுத்தல் மற்றும் தொடர் கண்காணிப்புக்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

அத்தோடு, சில பௌத்த மதகுருமார்களால், இலங்கை இராணுவம் மற்றும் பிற அரசாங்க அதிகாரிகளின் ஆதரவுடன் நிலம் மற்றும் இந்து மத வழிபாட்டுத் தலங்கள் தன்னிச்சையாக அபகரிக்கப்பட்டுள்ளன. மேலும், சட்டவாட்சியை மீறும் வகையில் பயங்கரவாதத் தடைச் சட்டம் தொடர்ந்தும் பயன்படுத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

அரசாங்கத்தால் நிறுவப்பட்ட, காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகம் (OMP) மற்றும் இழப்பீடுகளுக்கான அலுவலகம் போன்ற பொறுப்புக்கூறல் பொறிமுறைகள் பயனற்றவையாக இருப்பதோடு பாதிக்கப்பட்டோர் மற்றும் அவர்களது பிரதிநிதிகளால் நிராகரிக்கப்பட்டுள்ளன. அதேபோன்று, இவ்வாண்டின் தொடக்கத்தில் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட உண்மை, ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்கத்திற்கான ஆணைக்குழுவை ஸ்தாபிக்கும் வரைவுச் சட்டமூலமானது வெளிப்படைத் தன்மையைக் கொண்டிருக்கவில்லை என்பதோடு குறித்த தரப்பினருடனான போதுமான ஆலோசனைகள் பெறப்படாமை, பாலின ஏற்புத்தன்மை இன்மை மற்றும் பாதிக்கப்பட்டவர்களை மையமாகக் கொண்டிராமை எனும் பல்வேறு குறைபாடுகளை கொண்டிருந்தது.

கடந்த வாரம் போரில் உயிரிழந்தவர்களை நினைவுகூரும் வகையில் நடாத்தப்பட்ட நிகழ்வுகள் இலங்கை சட்ட அமுலாக்க அதிகாரிகளால் பலத்த கண்காணிப்பு மற்றும் அச்சுறுத்தலுக்கு உள்ளாகியிருந்தன. அவர்கள் இந்த நினைவுகூறல் நிகழ்வுகளை "பயங்கரவாத நடவடிக்கைகளின் மறுமலர்வை ஊக்குவிக்கும் செயற்பாடுகள்" என சித்தரித்தனர்.

*"போர்க்கால அட்டூழியங்களால் பெரிதும் பாதிக்கப்பட்டவர்களின் கருத்துச் சுதந்திரம் மற்றும் அமைதியான முறையில் ஒன்றுகூடும் சுதந்திரத்தைத் தடுப்பதை நோக்கமாகக் கொண்ட சட்ட அமுலாக்க அதிகாரிகளின் வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தையும் மீறிய அதிகார பயன்படுத்துகையானது இலங்கையினுடைய சர்வதேச சட்டக் கடப்பாடுகள் மற்றும் இலங்கை அரசியலமைப்பினூடாக உத்தரவாதமளிக்கப்பட்டுள்ள அடிப்படை உரிமைகளை மீறும் ஒரு செயற்பாடாகும்.''* என்கிறார் மெலிசா உப்ரேட்டி.

பொறுப்புக்கூறல் மற்றும் நீதியை முன்னெடுப்பதற்கு உண்மையான நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலமும் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் மனித உரிமைச் செயற்பாட்டாளர்களுக்கு எதிரான துன்புறுத்தல் மற்றும் அச்சுறுத்தலுக்கு முற்றுப்புள்ளி வைப்பதன் மூலமும் இலங்கையின் சர்வதேச மனித உரிமைகள் சட்டக் கடப்பாடுகளை மரியாதையளித்து, மேம்படுத்தி, நிறைவேற்றுமாறு இலங்கைக்கு சட்டவல்லுனர்கள் ஆணைக்குழுவானது அழைப்பு விடுக்கிறது.